# நேர்பட ஒழுகு

## வளர்நிலை – 9

ஔவைக் கிழவி நம் கிழவி, அமுதின் இனிய சொற்கிழவி. செவ்வை நெறிகள் பற்பலவும் தெரிந்து காட்டும் பழங்கிழவி – என்பார் கவிமணி தேசிக விநாயகம்.

அந்த ஔவைப்பாட்டி நமக்கென விட்டுச்சென்ற அரிய செல்வங்கள், அறிவுக்களஞ்சியங்கள் பல. அவற்றுள் ஒன்றுதான் நாம் எல்லாம் விரும்பிக்கற்கும் ஆத்திசூடி ஆகும்.

ஔவைப்பிராட்டியின் ஆத்திசூடியில், நாம் வாழ்க்கையில் மேன்மைபெற உதவும் பல அறிவுரைகள் அடங்கியுள்ளன. நாம் எல்லார்க்கும் நல்லவர்களாக வாழவேண்டும். வல்லவர்களாக உயரவேண்டும். நாடும், ஏடும் போற்றும் நன்மக்களாகத் திகழ வேண்டும் என்ற விருப்பத்தில் நம் பாட்டியார் பல அருளுரைகளை வழங்கியுள்ளார். நாம் செய்யத்தக்கன எவையென்றும், செய்யத்தகாதன எவை என்றும் தெளிவாக விளக்கியுள்ளார்.

“நேர்பட ஒழுகு” என்பது அவற்றில் ஒன்று.

செய்யத்தக்கன என்பனவற்றுள் “உத்தமனாய் இரு”, “பீடு பெறநில்” ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

அதேபோல் செய்யத்தகாதன என ஆத்திசூடி குறிப்பிடும், அழகலாதன செயேல், கெடுப்பதொழி, கொள்ளை விரும்பேல், சித்திரம் பேசேல், “சை எனத் திரியேல்”, நைவினை நணுகேல், ஆகிய அடிகள் கருத்திக் கொள்ளப்பட வேண்டியவை.

இவற்றுள் நேர்பட ஒழுகு எனும் ஓரடி மட்டுமே நம் வாழ்வு சிறப்டையப் போதுமானது.

நேர் என்பது நேர்மை எனப் பொருள்படும். நேர்மை என்பது பொய்யாமை, கள்ளாமை, கொல்லாமை, புறங்கூறாமை, வெகுளாமை முதலான அனைத்து ஆமைகளுக்கும் தீமைகளுக்கும் எதிரானது.

நேர்பட ஒழுகுவதற்கு நல்லொழுக்கமே அடிப்படை, “ஒழுக்கம் விழுப்பம் தரும்” என்றும் நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். அந்த ஒழுக்கத்துக்கும் ஆணிவேர் வாய்மை அதாவது பொய்யாமை.

அரிச்சந்திரன், ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி போன்றவர்கள் அந்த வாய்மையை, சத்தியத்தை நிலைநிறுத்தவே தம் உயிர்நீத்த உத்தமர்கள்.

“வாய்மையே வெல்லும்” என்பது சத்தியவாக்கு, பொய்யாமொழி நாம் என்றும் உண்மையையே பேசுவோம், நேர்மையாக ஒழுகுவோம்.

நன்றி, வணக்கம்!

---

- **“நேர்பட ஒழுகு” –** எங்கும் எப்பொழுதும் எச்செயலிலும் நேர்மையுடன் நடப்பாயாக.

- **“பீடு பெறநில்” –** பெருமை உண்டாகுமாறு நன்நெறிக்கண் நிலைத்து நிற்கவேண்டும்.

- **கெடுப்பதொழி –** பிறருக்குக் கெடுதி செய்வதை விட்டொழிப்பாயாக.

- **சித்திரம் பேசேல்** - அற்பமானவற்றை, அலங்கார வார்த்தைகளைப் பேசாதே.

- **சை எனத்திரியேல்** - பெரியோர் ‘சை’ என இகழ்ந்து கூறுமாறு நடக்கக்கூடாது.

- **நைவினை நணுகேல்** - உன்னையோ, பிறரையோ கெடுக்கும் செயல்களைச் செய்யாதே.